பக்கங்கள்: 11

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 புரட்டாதி 16 திங்கட்கிழமை 03.10.2022 கதிர் 330

**இ னி து ரகசியம் அல்ல!**

நான் 'என் எழுத்தாயுதம்' என்ற பெயரில் என் ஊடக அனுபவங்களை விவரித்து சுமார் 550 பக்கங்களில் ஒரு புத்தகத்தை எழுதியிருந்தேன். கொழும்பில் அதன் வெளியீட்டு வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வதற்காக 2

# இங்கு யுத்தக் குற்றம் இழைத்தோர் எந்த நாட்டிலும் சிக்கும் நிலைமை!

## ஜெனிவாவின் தற்போதைய பிரேரணையால் புதிய சூழல் என சுமந்திரன் எம்.பி. விளக்கம்



கொழும்பு, ஒக்ரோபர் 03

இலங்கையில் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக உலகளாவிய நியாயாதிக்கத்தின் கீழ் வழக்குத் தொடரக் கூடிய வகையில் கோப்புகள் தயார் நிலையில் வைக்கப்படும் சூழல் ஏற்பட்டிருக்கின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். 2

## இணையனுசரணை நாடுகளுடன் அமெரிக்கா இலங்கை விடயத்தில் உறுதியாக நிற்கிறதாம்

### அந்நாட்டின் தூதுவர் கூறுகின்றார்



இலங்கை தொடர்பான இணையனுசரணை நாடுகளுடன் அமெரிக்கா வலுவாக நிற்பதாக புலம்பெயர் தமிழர் கூட்டணியிடம் தெரிவித்துள்ள இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் ஜூலி சங், காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்களை தான் தனிப்பட்ட ரீதியில் சந்தித்தார் எனவும் எந்தவொரு ஜனநாயக நாட்டிலும் மக்களின் கோரிக்கைகளுக்கு செவிசாய்ப்பது இன்றியமையாததாகும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் ஜூலி சங்கின் 10

### ஜெனரல் சவேந்திர சில்வா உட்பட்ட

## இலங்கைப் படை அதிகாரிகள் மீது தடை விதிப்பது பற்றி பிரி. ஆராய்வு



முப்படைகளின் தலைமை அதிகாரியும் முன்னாள் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வாவிற்கு எதிராகவும், ஏனைய இராணுவ வீரர்களுக்கு எதிராகவும் தடைகளை விதிப்பதற்கான சாத்தியப்பாடு குறித்து பிரிட்டன் அரசாங்கம் ஆராய்ந்து வருவதாக பிரிட்டனின் வெளிவிவகார மற்றும் பொதுநலவாய அபிவிருத்தி தொடர்பான அமைச்சர் ஜெஸி நோர்மன் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் 10

## யாழ் பல்கலைக்கழக மாணவருக்கு சீனத் தூதரகம் ரூ.43 லட்சம் உதவி



(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களின் நலனுக்காக இலங்கைக்கான சீனத் தூதரகம் சீன தூதுவரின் உதவித்தொகை திட்டத்தின் கீழ் 43 லட்சம் ரூபாவை நன்கொடையாக வழங்கியுள்ளது. 10

## பசுபதிப்பிள்ளை காலமானார்



வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் சுப்பிரமணியம் பசுபதிப்பிள்ளை நேற்றுக் கிளிநொச்சியில் மாரடைப்பால் காலமானார்.

கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து வடக்கு மாகாண சபைக்கு தெரிவான இவர், மக்களின் மதிப்பினை பெற்றிருந்தார்.

ஓய்வுநிலை கிராம சேவையாளரான இவர், ஈழ விடுதலை போராட்டத்திற்கு அரசியல் ரீதியில் பங்களிப்பு வழங்கியவர்.

இவர் மறைவுக்கு 10

## கோட்டா கால சண்டித்தனங்களை கமல் குணரத்ன தொடர்கின்றாராம்



கொழும்பில் மக்கள் கூடும் இடங்களில் உயர் பாதுகாப்பு வலயங்களைப் பிரகடனப்படுத்தும் வர்த்தமானி அறிவித்தல் வருவதற்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமல் குணரத்னவே காரணம். அன்று 10

## வாள்வெட்டு வன்முறைக் கும்பலின் முக்கிய இளைஞர் தாவடியில் கைது



யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாக வாள்வெட்டு வன்முறையில் ஈடுபட்டு வந்த கும்பலின் முதன்மைச் சந்தேக நபர் மாவட்டக் குற்றத்தடுப்புப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். 10

## சு.கவினருக்கு ஒரு வித நோயாம்! கட்சித் தலைவர் மைத்திரி விசனம்



ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த சிலருக்கு ஒருவித நோய் உள்ளதாக அந்தக்கட்சியின் தலைவரும் முன்னாள் அதிபருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அதாவது ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் உள்ள சிலருக்கு ஆளுங்கட்சிப் பதவிகள் 10

# யாழ் கோட்டையில் இசகுபிசகுகளை தடுக்க திடீர் சுற்றிவளைப்பு நடக்கும்!



முதல்வர் மணிவண்ணன் முஸ்தீபு

(கலையமுதன்)

யாழ்ப்பாணம்,ஒக்.03

யாழ்ப்பாண கோட்டைப் பகுதிகளில் அநாகரிக செயற்பாடுகளில் ஈடுபட்டு வருபவர்களுக்கு எதிராக பொலிஸார் மற்றும் தொல்லியல் திணைக்களத்தினருடன் இணைந்து நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் திடீர் சுற்றிவளைப்புக் கண்காணிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் யாழ் மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் 10

## 3 வயதுக் குழந்தை மீது பாலியல் துஷ்பிரயோகம்




மொனறாகலைதொம்பகஹவெல பிரதேசத்தில் 3 வருடங்களும் எட்டு மாதமுமான குழந்தையொன்றைக் கடுமையாக பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய நபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் 29 வயதுடைய தொம்பகஹவெல பிரதேசத்தைச் சேர்ந்தவர் 10

## இனி இது ....................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீட்டிலிருந்து புறப்பட்ட அப்போதைய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அந்த நிகழ்ச்சியில் பங்குபற்றும் திட்டத்தைக் கைவிட்டு, இடைவழியில் திரும்புகின்றார் என எனக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது என்று நேற்று குறிப்பிட்டிருந்தேன் அல்லவா? அப்படி விபரீதம் நிகழ்வதற்குக் காரணம் இருந்தது.




என் அந்தப் புத்தகத்துக்கு முன்புற அட்டைப் படத்தை வடிவமைத்தவர் தம்பி இராஜேந்திரன். பத்திரிகையியலுடன் தொடர்புடைய கணினி வேலைகளில் அசகாய சூரர். பாடசாலை விட்ட காலத்திலேயே எங்களுடன் உதயனில் வந்து இணைந்து கொண்ட இளைஞர். உதயனுக்குக் கணினி அறிமுகமான காலத்தில், செயல் முகாமையாளர் கார்த்திகேயனுடன் அந்தத் தொழில்நுட்பத்தில் முழுமையாக மூழ்கியவர்.

பின்னர் நான் அச்சகம் நடத்திய காலத்திலும், காலைக்கதிரிலும் எனக்கு உறுதுணையாகப் பயணித்த தம்பி அவர். இப்போது 'ஈழநாடு' பத்திரிகையில் ஒரு தேர்ந்த பத்திரிகையாளர். எட்டுத் திக்குகளையும் குறிக்கும் எட்டு பேனாக்களை, காலைச் சூரியனின் எட்டுத் திக்குகளின் கதிர்களாக அர்த்தப்படுத்தி, காலைக்கதிரின் இலச்சினையை உதயசூரியன் போன்ற வடிவத்திலும், சூரியன் உதிக்கும் மலை முகட்டை விரிந்த புத்தக வடிவத்திலும் அற்புதமாக வடிவமைத்தவர் அவரே. அவரின் கற்பனையில் எழுந்த இலச்சினையே இன்றும் காலைக்கதிரின் முன்பக்கத்தை அலங்கரித்து நிற்கின்றது. ஒரு தடவை இன்றைய இதழின் முன்பக்கத்தில் அதனைப் புரட்டிப் பார்த்துக் கொண்டால் அவரின் திறமை உங்களுக்குப் புரியும்.

எனது புத்தக அட்டைக்கும் அவர் ஒரு நகாசு வேலை செய்தார். இலங்கைப் பத்திரிகையாளன் நான். இலங்கையின் புறவுருவத் தோற்றத்திற்கு முன்னால் சிரித்துக் கொண்டிருக்கும் என் முகத்தை 'புளோ - அப்' பண்ணி அட்டையை வடிவமைத்தார். இலங்கைப் புறஉருவப்படத்தில் என் முகம் மறைக்கும் பகுதி போக எஞ்சியவை, தமிழீழத்தின் எல்லைத் தோற்றத்தைத் தருவது போல தென்படும் - முற்றும் முழுதாக ராஜேந்திரனின் கற்பனையிலும் கை வண்ணத்திலும் உருவான - அந்த அட்டைப்பட வடிவமைப்பு எனக்குப் பிடித்துக் கொண்டதால் அதையே நான் தேர்ந்து கொண்டேன்.

என் நூல் வெளியீட்டு விழா அழைப்பிதழிலும் ஒரு பக்கத்தில் அந்த அட்டை வடிவத்தை அப்படியே வெளியிட்டேன். விழா ஏற்பாட்டாளர்கள் அந்தப் புத்தக அட்டையை விழா மண்டபத்தின் பின்புறத்தில் பெரிய ஸ்கிரீனில் பிரிண்ட் செய்து தொங்க விட்டிருந்தனர். என் பாடசாலை நண்பன் சண். தயாளனின் மகள் டயானா - அவரது கணவர் சந்துரு அணிதான் விழா ஏற்பாடுகள் யாவற்றையும் தங்கள் தலையில் போட்டுக் கொண்டு கவனித்தார்கள். அவர்களின் கைவண்ணம் அது.

இந்தப் பின்புலத்தில்தான் அந்தக் குழப்பம் நடந்தது.

ரணில் விக்கிரமசிங்கவின் இணைப்புச் செயலாளர் நண்பர் இக்பால் அழைப்பு எடுத்தார்.

"தலைவரின் (ரணிலின்) அட்வான்ஸ் பாதுகாப்பு டீம் அங்கு மண்டபத்துக்கு வந்திருக்கின்றது. மண்டபத்தின் பின்புறத் திரையில் நீங்கள் தமிழீழப் படம் தொங்க விட்டுள்ளீர்களாம். அதன் முன்னால் வந்து நின்று தலைவர் பேசினால் அவருக்குப் பிரச்சினையாகி விடும். அதுதான் நிகழ்ச்சிக்கு வருவதை அவர் கைவிடுகின்றார்." - என்றார் இக்பால்.

எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. ஆனாலும் என் திமிர்த்தனப் பேச்சை நான் கைவிடவில்லை.

"என் புத்தக அட்டையின் படம்தான் மேடைப் பின்புறம் காட்சியளிக்கின்றது. அந்தப் புத்தக அட்டையின் படம் அப்படியே உங்கள் தலைவருக்கு கொடுத்த அழைப்பிதழிலும் உள்ளது. அதைப் பார்க்கச் சொல்லுங்கள். அது இலங்கைப் படத்துக்கு முன்னால் எனது முகத்தோற்றம். அவ்வளவே. அதைத் தமிழீழப் புறவரைவாகப் பார்த்தால் அது அவரின் தப்பு என்று நான் கூறியதாக அவரிடம் சொல்லுங்கள்" - என்றேன்.

இக்பாலின் அழைப்பு இரண்டு நிமிடங்களில் திரும்பவும் வந்தது.

"அழைப்பிதழில் இருந்த அட்டைப் படம்தான் என்றால் பிரச்சினையே இல்லையாம். தான் வருகின்றார். இன்னும் சில நிமிடங்களில் அங்கு நிற்பார் என்று தலைவர் கூறினார்" என்றார் இக்பால்.

நிகழ்ச்சியில் பங்கு கொண்டு அருமையான உரை ஒன்றை ஆற்றினார் ரணில் விக்கிரமசிங்க. அவரும், ரவூப் ஹக்கீமும், சம்பந்தனும், அப்போதைய மேல் மாகாண ஆளுநர் முஸமிலும், வடக்கு மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் தவராஜா வும் ஆற்றிய உரைகளின் சிறு குறிப்பை இப்போதும் நீங்கள் youtubeபில் 'என் எழுத்தாயுதம்' என்ற என் நூலின் பெயரை அடித்துப் பார்த்தால் காண முடியும்.

ரணில் அந்த உரையில் முடிவில் ஒரு முத்தாய்ப்பு வைத்தார்.

"யுத்தம் முடிந்து விட்டது. தமிழர் தரப்பின் நிலைப்பாடு கூட மாறிவிட்டது. ஒன்றுபட்ட, பிரிக்க முடியாத, ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு காண அவர்கள் இணங்கி விட்டார்கள். இதைப் பயன்படுத்தி ஐக்கியமான நாட்டுக்குள் ஒரு நியாயமான தீர்வை நாம் காண வேண்டும். அது கட்டாயம்" - என்ற சாரப்பட பேசிய அவர் கடைசியில் "அப்படியான தீர்வைக் கண்டு தமிழர்களுக்கு வழங்குவதன் மூலம் வித்தியாதரனிடமாவது நாங்கள் நியாயமானவர்கள் என்பதை நிரூபிப்போம்!" - என்று உரையை ஆங்கிலத்தில் முடித்தார் ரணில்.

அப்படி அவர் கூறி முடித்து என்னைப் பார்த்தார். மேடையில் இருந்த இரா.சம்பந்தனும் கூட பார்வையாளர்கள் பக்கத்தில் முதல் வரிசையில் இடதுபுறத்தில் கடைசி ஆசனத்தில் அமர்ந்தவாறு புத்தகத்தை வாங்கிய அன்பர்களின் நூல்களில் என் நினைவுக் குறிப்பை பதிந்து ஒப்பமிட்டு வழங்கிக் கொண்டிருந்த என்னைச் சாடாரெனத் திரும்பிப் பார்த்தார். ரணிலின் அந்த வசனத்துக்கு அர்த்தம் இருந்தது.

இன்று புலிகள் இயக்கம் இல்லை, பிரபாகரன் இல்லை, வித்தியாதரனின் நண்பர் மதியுரைஞர் பாலசிங்கம் இல்லை, நாங்கள் நேர்மையான தீர்வை தமிழர்களுக்கு வழங்கி, அவர்கள் பக்கத்தில் மிஞ்சி இருக்கும் ஊடகவியலாளர் வித்தியாதரனிடமாவது எங்கள் நேர்மைத்தனத்தை நிரூபிப்போம் என்பதைத்தான் அந்தப் பாணியில் குறிப்பிட்டார் ரணில். என்னைப் புலியாகப் பார்த்த நையாண்டிப் பார்வை.

நான் அசடு வழியப் புன்னகைத்தேன். என்னை ஏமாளியைப் பார்ப்பது போல பார்த்தார் சம்பந்தன்.

தலைவர் பிரபாகரன், பாலா அண்ணன் பக்கத்தில் அந்த அணியில் நான் மிச்சமா, எச்சமா என்பவை எனக்கு தெரியவில்லை.

ஆனால் யுத்தம் முடிந்து 13 ஆண்டுகள் கடந்தும் கூட, அந்த நேர்மைத் தனத்தைத் தென்னிலங்கை இன்னும் தமிழினத்திற்கும் சர்வதேசத்திற்கும் நிரூபிக்கவே இல்லை என்பது மட்டும் உண்மை.

அப்படி நிரூபிப்பதற்கு ரணில் விக்கிரமசிங்கவுக்குத் திரும்பவும் ஒரு வாய்ப்புக் கிட்டியிருக்கின்றது. பார்ப்போம் என்ன செய்வார் என்று...!

- மின்னல் -

## இங்கு யுத்தக் குற்றம் இழைத்தோர் ..............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இப்புதிய பிரேரணை மீதான வாக்கெடுப்பு எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறவுள்ள நிலையில் பிரேரணை வலுவானதாக இல்லை என்றும் பலராலும் சுட்டிக்காட்டப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் ஆதாரங்களைத் திரட்டும் பொறிமுறை மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும் என அந்தப் பிரேரணையில் வலியுறுத்தப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்க விடயம் என நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்தார்.


வலுப்படுத்தல் எனதன் அர்த்தம் அதன் கீழ் குற்றத்தில் ஈடுபட்டவர்கள் தொடர்பில் தனித்தனியாக வழக்குத் தயார் கோவை **(Case Ready File)** ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சிலினால் தயார் செய்யப்பட்டுப் பேணப்படும்.

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பில் நம்பத்தகுந்த ஆதாரங்களின் அடிப்படையில் குற்றம் சாட்டப்படக் கூடிய ஒருவர் தமது நாட்டிற்குள் பிரவேசிக்கும் பட்சத்தில், அந்த நாடு அவருக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்கும் விசாரணைகளை மேற்கொள்வதற்குமான அதிகாரம் இந்த உலகளாவிய நியாயாதிக்கத்தின் கீழ் காணப்படும் என சுட்டிக்காட்டினார்.

அத்தகைய ஒருவர் ஒரு நாட்டில் கைதாகும் போது உடனடியாக அவர் தொடர்பான முழு விவரங்கள் அடங்கிய வழக்குத் தயார் கோவையை ஐ.நா. அந்த நாட்டுக்கு வழங்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்துவது என்பது கடினமானதொரு செயன்முறையாக இருந்தாலும், அதற்குரிய ஆரம்பகட்ட நகர்வுகளை முன்னெடுக்குமாறு உறுப்பு நாடுகளிடம் கோரியிருப்பதாகவும் சுமந்திரன் குறிப்பிட்டார்.



# யானைகள் சண்டையிடும் போது புல் நசுக்கப்படும் என்கிறார் ரணில்!


## பிலிப்பைன்ஸில் அவர் உபதேசக் கருத்து

உலக அரசியல் போட்டிகளுக்கு முகங்கொடுக்கும் வகையில் திட்டங்களை வகுக்க வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிலிப்பைன்ஸில் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு வகுக்காவிட்டால், முதலாம் உலகப் போருக்குப் பின்னர் ஐரோப்பாவைப் போன்று ஆசியப் பகுதியும் நிலையற்றதாகிவிடும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆசிய அபிவிருத்தி வங்கி மாநாட்டில் உரையாற்றிய ஜனாதிபதி, வளர்ச்சியடைந்துள்ள ஆசிய நாடு இருண்ட எதிர்காலத்தை எதிர்நோக்கி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

யானைகள் சண்டையிட்டால் புல் நசுக்கப்படும் என்ற பழமொழியை குறிப்பிட்டே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு



கூறியுள்ளார்.

உலகளாவிய போட்டியானது எதிர்காலத்தில் நெருக்கடியைக் குறைக்க முக்கிய நாடுகளின் இயலாமையை வெளிப்படையாக காட்டும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

# பொருள்களின் விலைக்கு எதிராக ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுக்கத் தயாராகும் ஆளும்கட்சியினர்!

அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலையைக் குறைத்து மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுக்க ஆளும்கட்சியின் சில உறுப்பினர்கள் தயாராகின்றனர் என அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இலங்கை வந்தவுடன் இந்தக் கோரிக்கையை உடனடியாக விடுக்கவுள்ளோம் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

முன்னதாகக் இந்தக் கோரிக்கையை முன்னாள் அமைச்சர் விமலவீர திஸாநாயக்க மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார சுமித்ரராச்சி ஆகியோர் ஜனாதிபதியிடம் விடுத்திருந்தனர்.

அத்துடன், மக்களின் நெல் கொள்வனவுக்கான விசேட வேலைத்திட்டத்தை நடைமுறை படுத்தவும் விமலவீர திஸாநாயக்க உட்பட பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் பலர் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை, காலவரையறையின்றி பொருள்களின் விலைகளை அதிகரிக்கும் வர்த்தக மாபியாவை முறியடிக்கவும் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்க பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் குழுவொன்று தயாராகியுள்ளது.

# புனர்வாழ்வுச் சட்டம் அரசமைப்புக்கு முரண்!

## மரிக்கார் எம்.பி. உயர்நீதிமன்றில் மனு

புனர்வாழ்வு பணியக சட்டமூலம் அரசமைப்பிற்கு எதிரானது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். எம். மரிக்கார் உயர் நீதிமன்றில் மனு தாக்கல் செய்துள்ளார்.

சட்டமூலத்தை 3 மற்றும் 4 பிரிவுகள் வன்முறையில் ஈடுபடுபவர்களை கிளர்ச்சியாளர்கள் மற்றும் சந்தேக நபர்கள் என வரையறுத்துள்ளதாகவும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளார்.

ஆகவே இந்த சட்டமூலம் அரசமைப்பு சட்டப்பிரிவு 4, 12 மற்றும் 14



இற்கு முரணானது என்றும் எஸ். எம். மரிக்கார் மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

# புனர்வாழ்வுப் பணியக அமைப்பு சட்டமூலம்: சமூக மற்றும் அரசியல் ஆர்வலர்கள் அச்சம்

புனர்வாழ்வு பணியகத்தை அமைப்பதற்காக கொண்டுவரப்பட்ட சட்டமூலம் போராட்காரர்களை ஒடுக்குவதற்கு வழி வகுக்கும் என சமூக மற்றும் அரசியல் ஆர்வலர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

போராட்ட செயற்பாட்டாளர்களை புனர்வாழ்வு முகாம்களில் நீண்டகாலம் தடுத்து வைக்க இந்த சட்டமூலம் அனுமதிக்கும் என அவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

நீதியமைச்சர் கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷவால் புனர்வாழ்வு பணியகம் என்ற சட்டமூலத்தை செப்ரெம்பர் மாதம் 23ஆம் திகதி நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

போதைப்பொருள் பயன்படுத்துவோர், முன்னாள் மற்றும் தவறாக வழி நடத்தப்பட்ட போராளிகள், வன்முறைக் குழுக்களின் உறுப்பினர்களை மறுவாழ்வு அளிப்பதே பணியகத்தின் நோக்கமாகும்.

இலங்கை இராணுவம், விமானப் படை மற்றும் கடற்படை ஆகியவற்றின் எந்தவொரு உறுப்பினரையும் புனர்வாழ்விற்காக வழிநடத்தும் அதிகாரம் பணியகத்துக்கு வழங்கப்படும்.

இதேவேளை புனர்வாழ்வுப் பணியக சட்டமூலம் அரசமைப்பிற்கு எதிரானது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். எம். மரிக்கார் உயர் நீதிமன்றில் மனு தாக்கல் செய்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.




காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30. கல்லூரி வீதி. யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இது புதிய திருப்பம்

பயங்கரவாதரத் தடைச் சட்டத்தை நீக்கக்கோரி நடத்தப்பட்ட கையெழுத்துச் சேகரிக்கும் திருவிழா முடிவுக்கு வந்திருக்கின்றது.

யாழ் மாவட்டத்தில் காங்கேசன்துறைத் தொகுதியில் ஆரம்பித்த இந்தப் போராட்டம் ஊர்தி மூலம் நாட்டின் 25 மாவட்டங்களுக்கும் நகர்ந்து, நேற்று அம்பாந்தோட்டை மாவட்டத்தின் தங்காலை நகரின் மத்தியில் முடிந்திருக்கின்றது.

இலங்கையின் வடக்கின் உச்சிப்புள்ளியில் ஆரம்பித்த போராட்டம், தெற்கு முனையின் கடைக்கோடியில் முடிவடைந்து இருக்கின்றது. அதற்கு அப்பாலும் இந்தப் போராட்டத்தின் ஆதியிலும் அந்தத்திலும் இன்னும் ஒரு சிறப்பு உண்டு.

வடக்கில் இலங்கைத் தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவின் வீட்டுக்குப் பக்கத்தில் மாவிட்டபுரத்தை ஒட்டி ஆரம்பமான போராட்டம், தெற்கில் அம்பாந்தோட்டையில் தங்காலையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவின் கால்ட்டன் இல்லத்துக்குப் பக்கத்தில் – கூப்பிடு தொலைவில் – நேற்றுப் பெரும் கூட்டத்துடன் முடித்து வைக்கப்பட்டிருக்கின்றது.

தமிழர்கள் மத்தியில் செல்வாக்கு மிக்க கட்சி தமிழரசு. அதன் தலைவர் வீட்டுக்கு பக்கத்திலிருந்து ஆரம்பம். சிங்களவர் மத்தியில் செல்வாக்கு மிக்க கட்சி பொதுஜன பெரமுன. அதன் தலைவர் வீட்டில் இருந்து 50 யார் தொலைவில் போராட்டத்தின் பூர்த்தி.

ஆரம்பத்திலும் முடிவிலும் தமிழரசுத் தலைவர் மாவை சேனாதிராசா பிரசன்னமாகி இருந்தார். மறு பக்கத்தில் மஹிந்தர் இல்லை.

கொடூரமான பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கக் கோரும் மக்களின் தலைவராக மாவை. அந்தச் சட்டத்தை விடாது கைக்கொண்டு நடைமுறைப்படுத்தும் அரசின் பிதாமகராக மஹிந்தர்.

தற்காலிக ஏற்பாடுகள் சட்டம் மூலமாக கொண்டு வரப்பட்ட இந்தக் கொடூரச் சட்டம் சுமார் 44 ஆண்டு காலம் தொடர்ந்து பின்பற்றப்படுகின்றது. இந்தக் கையெழுத்துச் சேகரிக்கும் போராட்டம் வெளிப்படுத்தும் மக்கள் ஆதரவு கண்டு அஞ்சி, இந்தச் சட்டத்தை இந்த எதேச்சாதிகார ஆட்சியாளர்கள் கைவாங்கி விடுவர் என்று நம்புவதற்கு இடம் ஏதுமில்லை. ஆனால் இந்த கையெழுத்துச் சேகரிக்கும் போராட்டத்தை ஒட்டி இரண்டு விடயங்கள் அவதானிக்கப்பட வேண்டி இருக்கின்றன.

ஒன்று – இந்தப் போராட்டத்தை ஒட்டிய நிகழ்வில் பேசிய அல்லது கலந்துரையாடிய சிங்களவர்கள் பலரும் ‘இந்தச் சட்டம் கொடூரமானது என்று தமிழர்கள் கூறிய போது நாம் அது பற்றி அலட்டிக் கொள்ளவில்லை, இப்போதுதான் அதன் உண்மைச் சொரூபம் – கொடூர முகம் – எங்களுக்குத் தெரிகின்றது’ என்கின்றனர்.

அடுத்தது – இந்தக் கையெழுத்துச் சேகரிக்கும் போராட்டத்தை சுமந்திரன், சாணக்கியன் முதலிய தமிழ்த் தரப்பினரே முன்னின்று நடத்தினர். தென்னிலங்கைச் சிங்களவர்களின் மூலை முடுக்கெல்லாம் இந்த ஊர்தி போய் வந்தது. ஒலி பெருக்கிகளுடன் பிரதான இடங்களில் எல்லாம் பிரச்சாரத்தில் ஈடுபட்டது. எங்கும் ஒரு சின்ன எதிர்ப்புக் கூடக் காட்டப்படவில்லை. ஒரு கல் வீச்சோ, எதிர்க் குரலோ, ஆட்சேபமோ கிளம்பவில்லை. எந்த எதிர்ப்பு அசுமாத்தமும் இல்லை. சிங்கள மக்களின் பேராதரவு கிட்டியதா, இல்லையா என்பது இரண்டாவது விடயம். ஆனால் சிங்கள மக்களின் ஒரு பிசிறு எதிர்ப்புக் கூட இந்தத் தொடர் முயற்சிக்கு எதிராகக் காட்டப்படவில்லை. அந்த வகையில் இந்த எத்தனம் வெற்றியே. ஒரு புதிய திருப்பமே.

## இலங்கைக்கான இந்தியத் தூதர் நேற்று திருமலைக்கு விஜயம்!




இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே நேற்று (ஞாயிற்றுக்கிழமை) திருகோணமலைக்கு விஜயம் செய்திருந்தார்.

திருகோணமலை நகரசபை மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு திருகோணமலை மாவட்டத்தினை சேர்ந்த குறைந்த வருமானம் ஈட்டும் 200 குடும்பங்களுக்கான உலர் உணவு உதவி வழங்கும் நீகழ்வில் கலந்து கொண்டு இந்திய உதவித்தொகை மூலம் வழங்கப்பட்ட பொருள்களை வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கலையரசன், தமிழரசுக் கட்சியின் ஆதரவாளர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

## பேக்கரி உற்பத்திகளின் விலை மீண்டும் எகிறலாம்?



சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரி அமுலுக்கு வருவதை அடுத்து பேக்கரி உற்பத்திகளின் விலை மீண்டும் அதிகரிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜெயவர்தன இதனைத் தெரிவித்துள்ளார்.

புதிய நடைமுறையின்படி, பாண் உட்பட்ட உற்பத்திப் பொருள்களுக்கு புதிய வரி விதிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கோதுமை மாவுக்கு வரி விதிக்கப்படவுள்ளமையால், பிரதான கோதுமை மா இறக்குமதியாளர்கள் தமது விலையை அதிகரித்தால் இயல்பாகவே வெதுப்பக தொழில் பாதிக்கப்படும்.

எனவே இந்த அனைத்து காரணிகளின் விளைவாக வெதுப்பகப் பொருள்களின் விலை உயர்வைத் தவிர்க்கமுடியாது.

எனினும் அவை எந்த விகிதத்தில் அதிகரிக்கப்படும் என்பதை இன்னும் தீர்மானிக்கவில்லை என ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

## அவைத்தலைவர்களின் கொடுப்பனவுகளை மட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானம்

வாகனங்கள், எரிபொருள் மற்றும் தொலைபேசி உள்ளிட்ட மாகாண சபை அவைத் தலைவர்களின் கொடுப்பனவுகளை மட்டுப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கான விசேட சுற்றறிக்கை ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவால் அனைத்து ஆளுநர்கள், மாகாண பிரதம செயலாளர்கள் மற்றும் ஆளுநரின் செயலாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய மாகாண சபைகளின் அவைத்தலைவர் ஒருவருக்கு உத்தியோகபூர்வ வாகனம் ஒன்றே ஒதுக்கப்படவுள்ளதுடன், அதற்காக மாதாந்த எரிபொருள் கொடுப்பனவாக 150 லீற்றர் எரிபொருளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

சந்தையில் நிலவும் எரிபொருள் விலைக்கு ஏற்ப எரிபொருள் கொடுப்பனவு தீர்மானிக்கப்படுகிறது.

இதற்கிடையில், தொலைபேசி கொடுப்பனவாக, அலுவலக தொலைபேசிக்கு மாதம் ஐந்தாயிரம் ரூபாயும், வீடு மற்றும் கைபேசிக்கு மாதம் 2 ஆயிரத்து 500 ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

முன்னதாக, மாகாண சபைகளின் தலைவர்களுக்கு இரண்டு அல்லது மூன்று வாகனங்கள் மற்றும் எரிபொருள் மற்றும் தொலைபேசி கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன.

தற்போதைய பொருளாதார நெருக்கடியைக் கருத்தில் கொண்டு இந்த சலுகைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

மாகாண சபைகளின் பதவிக்காலம் முடிவடைந்தாலும், அடுத்த மாகாண சபை கூடும் வரையில் அவைத்தலைவர் பதவி நடைமுறையில் இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதி மாளிகையில் சேதவிவரங்கள் தொடர்பான விசாரணைகள் நிறைவடைவு!

கடந்த ஜூன் 9 ஆம் திகதி போராட்டக்காரர்களால் கைப்பற்றப்பட்ட ஜனாதிபதி மாளிகையின் விசாரணையை தொல்பொருள் திணைக்களம் நிறைவு செய்துள்ளது.

மேற்படி அறிக்கை உடனடியாக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படும் என அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மாளிகை கட்டடம் மற்றும் அங்கு வைக்கப்பட்டிருந்த தொல்பொருள் சின்னங்கள் மற்றும் ஓவியங்கள் சேதமடைந்துள்ளன எனத் தொல்பொருள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, அலரி மாளிகை மற்றும் பிரதமர் அலுவலகம் போராட்டக்காரர்களால் சேதப்படுத்தப்பட்டனவா என்பது தொடர்பில் பொலிஸாரிடம் அறிக்கைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தொல்பொருள் திணைக்களம் தெரிவித்துள்ளது.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# யாழ்ப்பாணம் உடுவில் மகளிர் கல்லூரி மாணவர்கள் அறிவியல்நகர் யாழ். பல்கலைக்குக் கல்விச் சுற்றுலா!






யா/உடுவில் மகளிர் கல்லூரி ஊடகக் கற்கை மாணவர்கள் அறிவியல்நகர் யாழ்.பல்கலை வளாகத்துக்கு கல்விச் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டு பொறியியல், விவசாய, தொழில்நுட்பபீடங்களைப் பார்வையிட்டனர்.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் மேலதிக இணைப்பாளரும், யாழ் பல்கலைக்கழக பேரவை உறுப்பினருமான கோடீஸ்வரன் றுாங்கனிடம் உடுவில் மகளிர் கல்லூரி சார்பில் விடுக்கப்பட்ட வேண்டுகோளின் அடிப்படையில், யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராஜாவின் அனுமதியுடன் இந்தக் கல்விச் சுற்றுலா மேற்கொள்ளப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் கல்வி மற்றும் கைத்தொழில் துறைகளின் ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள் இந்தச் சுற்றுலாவை மாவட்ட மட்டத்தில் ஒருங்கிணைத்தனர்.

காலை 6.15 மணியளவில் இணுவில் ரயில் நிலையத்தில் இருந்து ஊடகக் கற்கை பயிலும் 20 மாணவர்கள், ஊடகக் கற்கை ஆசிரியர் சுதாஜினி மற்றும் பௌதீக ஆசிரியர் கீதா ஆகியோருடன் யாழ்ராணி ரயிலில் அறிவியல்நகர் நோக்கிய பயணத்தை ஆரம்பித்தனர்.

8.15 மணி அளவில் அறிவியல்நகர் ரயில் நிலையத்தை வந்தடைந்த மாணவர்களையும், ஆசிரியர்களைகயும் வரவேற்ற பல்கலைக்கழக மாணவர்கள், பல்கலைக்கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட பஸ்ஸில் அனைவரையும் அறிவியல்நகர் யாழ்.பல்கலைக்கழக வளாகத்துக்கு அழைத்துச் சென்றனர்.

யாழ் பல்கலைக்கழக அறிவியல்நகர் வளாகத்தில் அனைத்துப் பீடங்களையும் பார்வையிடுவதற்கான முழுமையான ஏற்பாடுகளை அறிவியல்நகர் வளாக பிரதிப் பதிவாளர் ஜெயக்குமார் மேற்கொண்டிருந்தார்.

வளாகத்தை வந்தடைந்தவுடன் அங்கு அமைந்துள்ள விசேட அம்மாச்சி உணவகத்தில் தமது காலை ஆகாரத்தை உண்ட உடுவில் மகளிர் கல்லூரி மாணவர்களும், ஆசிரியர்களும், அதன்பின்னர் பொறியியல்பீடத்தைப் பார்வையிடச் சென்றனர்.

பொறியியல் பீடாதிபதி கலாநிதி பிரபாகரன் ஆசிரியர்களையும், மாணவர்களையும் வரவேற்று விசேட விளக்கக் கலந்துரையாடல் ஒன்றை பொறியியல்பீட விரிவுரையாளர்கள் சகிதம் நடாத்தினார்.

அதன்பின்னர், பொறியியல் பீடத்தின் கட்டடவாக்கத்துறை, இயந்திரவியல்துறை, மின்னியல்துறை, இலத்திரனியல்துறை ஆகியவற்றுக்குத் தனித்தனியே மாணவர்கள் அழைத்துச் சென்று அந்தந்தத் துறைகளின் தலைவர்கள் மற்றும் விரிவுரையாளர்களால் துறைசார் கற்கைநெறிகள் தொடர்பான விளக்கங்களை வழங்கினர்.

அதன்பின்னர் விவசாயபீடத்துக்குச் சென்ற மாணவர்களை விவசாய பீடாதிபதி வசந்தரூபாவின் ஏற்பாட்டில் விரிவுரையாளர்கள் விவசாய பீடத்தின் ஒவ்வொரு துறைகளுக்கும் அழைத்துச்சென்று விவசாயக் கற்கைநெறிகள் பற்றி விளக்கமளித்தனர். கூடவே, ஜப்பான் அரசாங்கத்தின் விசேட நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட நவீன விவசாய தொழில்நுட்ப ஆராய்ச்சி மையத்தையும் மாணவர்கள் பார்வையிட்டு அதன் செயற்பாடுகள் பற்றி அறிந்துகொண்டனர். அத்துடன், விவசாயபீட பண்ணையையும், அதன் செயற்பாடுகளையும்கூட மாணவர்கள் பார்வையிட்டனர்.

விவசாயபீடத்தை நிறைவுசெய்துகொண்டு தொழிநுட்ப பீடத்துக்குச் சென்ற மாணவர்களை தொழிநுட்ப பீடத்தின் முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி கேதீஸ்வரன் வரவேற்று தொழில்நுட்ப பீடத்தின் கற்கைநெறிகள், தொழிநுட்பச் செயற்பாடுகள் பற்றி பூரண விளக்கமளித்தனர்.

மாலை 4 மணியளவில் தமது கல்விச் சுற்றுலாவை நிறைவுசெய்த மாணவர்களும், அவர்களை அழைத்துவந்த ஆசிரியர்களும், இந்தச் சுற்றுலாவுக்கான ஏற்பாட்டைச் செய்து தந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் மேலதிக இணைப்பாளர் றுாங்கன், அனுமதியளித்த பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராஜா, பொறியியல், விவசாய, தொழிநுட்ப பீடங்களின் பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள், பிரதிப் பதிவாளர், துணைப் பதிவாளர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்களுக்கும், கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் கல்வி மற்றும் கைத்தாழில்துறை ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்களுக்கும் தமது நன்றியைத் தெரிவித்தனர்.

மாலை 4.45 அளவில் அறிவியல்நகர் ரயில் நிலையத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கித் தமது பயணத்தை ஆரம்பித்த உடுவில் மகளிர் கல்லூரி ஆசிரியர்களும், மாணவர்களும், வடக்கு மாகாணத்தில் இந்தளவு வசதிகளுடன் யாழ்.பல்கலைக்கழக பீடங்கள் அமைவதற்கான பரந்த நிலப்பரப்பைப் பெற்றுக்கொடுத்ததுடன், இன்று அறிவியல்நகர் பல்கலைக்கழகம் வரையில் போக்குவரத்துச் செய்வதற்கு ரயில் சேவையையும் ஆரம்பித்திருக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு தமது நன்றிகளைத் தெரிவித்தனர்.



காலைக்கதிர்
Kalaikkathir

**இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘காலைக்கதிர்’ வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.**

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## உள்நுழைந்த அமெரிக்காவின் நிலைப்பாடு



- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம் - 139**

விடுதலைப் புலிகள் தங்களை வொஷிங்டன் நிகழ்விற்கு அழைக்காதமையையிட்டு விசனம் தெரிவித்தும் அமெரிக்காவின் இப்படியான செயற்பாடுகள் இதுவரை நடந்து வந்த சுமுகமான பேச்சுவார்த்தைகளில் நம்பிக்கையீனங்களையும் குந்தகங்களையும் விளைவிக்கின்றன எனக் குறிப்பிட்டு 4 ஏப்ரல் 2003இல் தமது கிளிநொச்சித் தலைமைக் காரியாலயத்தில் இருந்து அறிக்கை வெளியிட்டார்கள்.



ரிச்சர்ட் ஆர்மிடேஜ்

ஸ்ரீலங்கா அரசிடமிருந்தோ, பேச்சுவார்த்தைகளின் அனுசரணையாளர்களிடமிருந்தோ பதில் வராதமையால் விடுதலைப் புலிகள் இயக்கம் தாங்கள் ஜப்பான் ஏற்படுத்தும் ஜுன் மாத சர்வதேச நாடுகளின் சந்திப்பில் பங்குபற்றுவதை மீளாய்வு செய்வோம் என அறிவித்து, நடப்பவை தங்களுக்கு நம்பிக்கையீனங்களைத் தருகின்றன என்றும், அமெரிக்கா ஈடுபட்டு யுத்த நிறுத்த ஒப்பந்தத்தினதும், சமாதானப் பேச்சு வார்த்தைகளினதும் அடிப்படைகளையே மாற்றுகின்றது என்றும் குற்றம் சாட்டி, அந்த ஒப்பந்த வாசகங்கள் இரு பகுதியினராலும் பாரபட்சமின்றி நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என வலியுறுத்தியது.

அப்படி இருந்தும் விடுதலைப் புலிகளுக்கு அழைப்புத்தராமலேயே வொஷிங்டன் சந்திப்பு 21 நாடுகளின் முக்கியமான பிரதிநிதிகளுடனும், 16 சர்வதேச நிறுவனங்களின் பங்குபற்றுதலுடனும் நடந்து, 3.5 பில்லியன் டொலர்கள் உதவி தருவதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அந்தச் சந்திப்பில் உரையாற்றிய போதும் அமெரிக்க இராஜாங்க உதவிச் செயலாளர் ரிச்சர்ட் ஆர்மிரேஜ், விடுதலைப் புலிகள் அழைக்கப்படாதமை சம்பந்தமான கேள்விகள் எழுந்த போது, “எங்கள் நிலைப்பாடு மிகத் தெளிவாகவே உள்ளது. விடுதலைப்புலிகள் பயங்கரவாதத்தை சொல்லிலும் செயலிலும் தாங்கள் நிராகரித்து விட்டோம் எனத் தெளிவுபடுத்த வேண்டும் என்பதே நாங்கள் கூறுவது” – என்றார்.

இந்த நடப்புகளால் அமெரிக்கா விடயத்தில் உள்ளீட்டு, சமாதானப் பேச்சு வார்த்தைகளை திசை திருப்புகிறது என்பதை மதியுரைஞர் புரிந்து கொண்டார்.

அமெரிக்காவும் அதன் அரங்கில் இணைந்து, புவியலுக்காக சேர்ந்து இயங்கும் நாடுகளும் வாழ்வாதாரம், புனர்நிர்மாணம், மீளமைப்பு என்பவற்றுக்கான நிதிகளை அவர்கள் தீர்மானிக்கும் அரசியல் அடிப்படைகளுடன் முடிச்சிட்டு, அதற்கு அழுத்தம் தந்து, இறைமை கொண்ட ஸ்ரீலங்கா அரசுக்குச் சாதகமாகப் பயணித்து, விடுதலைப் புலிகளுக்கு சமாதான பேச்சு வார்த்தைகளின் தொடக்கத்திலிருந்த சமநிலைத் தரத்தை மதிக்க மாட்டார்கள் என்பதும் மதியுரைஞருக்கு விளங்கியது.

அவற்றுக்குள் அகப்பட்டு விடாமல், தாங்கள் வெளியேறிவிட வேண்டும் என்றே விடுதலைப் புலிகள் கணித்தார்கள். தமிழீழக் கோரிக்கையையோ அல்லது அதற்கான ஆயுதப் போராட்டத்தையோ கைவிடுவதற்கு அவர்கள் தயாராகவில்லை.

நடந்து கொண்டிருப்பவை திருப்தியாகவில்லை எனத் தங்களது ஏமாற்றங்களை விவரித்து விடுதலைப் புலிகள் ரணில் விக்ரமசிங்கவுக்கு நீண்ட மடல் ஒன்றை எழுதி, தாங்கள் ஜப்பானில் டோக்கியோவில் நடக்கப் போகும் சந்திப்பில் பங்குபற்றப் போவதில்லை என அறிவித்தனர். தாங்கள் இந்த முடிவை வேறு வழியில்லாமல் எடுக்கிறார்கள் எனவும், ஆனால் அப்பொழுதும் சமாதான பேச்சு வார்த்தைகள் மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண விரும்புகிறார்கள் எனவும், அது நம்பிக்கை மிக்கதாக இருக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்கள்.

விடுதலைப் புலிகள் முன்னர் தீர்மானித்தபடி தமிழ் மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்கும் புனர் நிர்மாணங்களுக்கும் அவர்களது மீள் கட்டமைப்புக்கும் முக்கியம் தந்து, இதற்கான நிதியையும் கட்டமைப்புக்களையும் இதய சுத்தியுடன் இணைக்கத்திற்காக ஸ்ரீலங்கா தரப்பு முன்னெடுக்க வேண்டும், அத்தோடு சரிசமமாகத் தீர்வு நோக்கி நகரலாம் என்பதே திட்டமாக இருந்தது.

ஆனால், தற்போது எழுந்த நிலையில், சர்வதேசம் அப்படியான பணிகளுக்கு தரும் நிதிகள் ஸ்ரீலங்கா அரசின் ஊடாக தமிழ் பகுதிகளில்தான் பாவிக்கப்பட வேண்டுமானால், விடுதலைப் புலிகள் தனி நாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டு, ஆயுதங்களைப் பாவிக்காமல் இருப்பதற்கான உத்தரவாதங்களைத் தர வேண்டும் என்று விடயம் வளர்ந்திருந்தது.

விடுதலைப் புலிகளுக்காக மதியுரைஞர் பாலசிங்கம் பிரதமர் ரணிலுக்கு எழுதிய மடலுக்கு அவரிடமிருந்து விரிவான பதில் வரவில்லை.

விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைகளில் இருந்து விலகக் கூடாது எனவும், அத்தகைய நிலைமை ஏற்படுவது குறித்து விசனமடைகிறேன் எனவும், விரைவில் மதியுரைஞர் சுட்டிக்காட்டிய விடயங்களுக்கு விவரமான பதில் தருவேன் எனவும் எழுதினார்.

அந்தக் கடிதத்தின் சாரத்தில் திருப்திப்படாத விடுதலைப் புலிகள் ஏப்ரல் கடைசி வாரத்தில் சந்திப்பதாக இருந்த ‘சிரான்’ என்ற கட்டமைப்பு கூட்டத்திற்கு நிலத்தில் உறுதியான நிலைப்பாடுகள் இந்த கட்டமைப்பின் மூலம் தெரியும் வரை இதில் பங்குபற்றுவதில் பிரயோசனம் இருப்பதாகத் தெரியவில்லை எனக் கூறிப் புறக்கணித்தார்கள்.

பிரதமர் ரணிலுக்கு எழுதப்பட்ட மடலுக்கு அவரிடம் இருந்து விரிவான பதில் வரும் முன்னர் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டவை பற்றி ஸ்ரீலங்காவுக்கான அமெரிக்க தூதுவரே பத்திரிகைப் போட்டிகள் ஊடாகப் பதில் தருவதில் ஈடுபட்டார். தூதுவர் அஸ்லி வில்லிஸ் விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைகளில் இருந்து விலகி இருக்கக் கூடாது எனவும், அவர்கள் தொடர்ந்தும் ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்குத் தங்களது பிரச்சினைகளைத் தெரியப்படுத்தி, அவற்றுக்கான எதிர்பார்ப்புகளையும் பேச வேண்டும் எனவும் பேட்டிகளில் தெரிவித்தார்.



தூதுவர் அஸ்லி வில்லிஸ்

தொடர்ந்து அவரால், விடுதலைப் புலிகள் சர்வதேசத்தினால் அங்கீகாரம் பெற வேண்டுமானால் அவர்கள் பயங்கரவாதத்தையும் வன்முறையையும் கைவிட வேண்டும், அவர்களது எண்ணத்தில் ஆயுதங்களையும் இராணுவக் கட்டமைப்புகளையும் வைத்திருப்பது தங்களுக்கும் தமிழ் மக்களுக்கும் பாதுகாப்பு எனக் கருதலாம். ஆனால், மாற்றாக அவை தமிழ் மக்களது உரிமைகளை பாதுகாக்கப் போவதில்லை, மேலும் முரண்பாடுகளை வளர்க்கவே உதவும் என்ற செய்தியும் தரப்பட்டது.

இவற்றிற்கு மறுப்பாக மதியுரைஞர் 25 ஏப்ரலில் தமிழ்நெற் இணையதளத்தில் விடுதலைப் புலிகள் பேச்சு வார்த்தைகளில் இருந்து விலகினார்கள் என்பது தப்பான அர்த்தத்தில் எடுத்துக் கொள்ளப்படுகிறது எனவும், தாங்கள் ஒரேடியாக பேச்சுவார்த்தைகளில் இருந்து விலகும் எண்ணம் கொண்டிருக்கவில்லை எனவும், அரசாங்கம் பேச்சுவார்த்தைக் காலங்களில் ஏற்றுக் கொண்டவற்றை நடைமுறைப்படுத்தி, தமிழர் பிரதேசங்களில் வழமையான நிலைமைகளை ஏற்படுத்த எடுக்கப்படும் நடவடிக்கைகளை கவனித்து, அவற்றின் அடிப்படையில் முன்னேறுவதுதான் நோக்கம் எனவும், தமிழ் மக்கள் அமெரிக்கத் தூதுவர் அஸ்லி வில்லிஸின் கருத்தை ஒரு போதுமே ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் எனவும் தெரிவித்தார்.



பாலசிங்கம்

விடுதலைப்புலிகளின் ஆயுதங்களும் இராணுவக் கட்டமைப்புகளும் தமிழ் மக்களுக்கான பாதுகாப்பாகவும் பேரினவாதத்தின் முன்னெடுப்புகளைக் கட்டுப்படுத்துவதற்காகவும் இருப்பவை, அரசாங்கத்தின் அட்டூழியங்களால்தான் இவை தேவையாக வளர்ந்தன, இனப் பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் காணும் வரை இவற்றைக் கைவிட வேண்டும் என்று தூதுவர் கூறுவதை தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். தங்களது இருப்பைத் தக்க வைத்துக்கொள்ள கடைசியாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது, அவர்கள் தேடுவது கணிசமான அரசியல் சுயாட்சி மட்டுமல்ல, தங்களது பாரம்பரிய பிரதேசங்களில் சமாதானமாகவும் சுயமரியாதையுடனும் பாதுகாப்பாகவும் வாழ்வதையே. இதனை அமெரிக்கத் தூதுவரும் அமெரிக்க மக்களும் புரிந்து கொள்ள வேண்டும். விடுதலைப் புலிகள் சமாதான ஒப்பந்தமும் போர்நிறுத்தமும் ஏற்படுத்திக் கொண்டதன் பின், ஆயுதங்களைப் பாவித்ததில்லை, ஆனால் அரசியல் தீர்வு ஒன்று கிடைக்கும் வரை ஆயுதங்களை கைவிட வேண்டும் என்ற பேச்சுக்கு இடமில்லை என்ற கூற்றும் மதியுரைஞரால் ஆணித்தரமாக அறையப்பட்டது.

அவற்றின் பின் தான் பிரதமர் ரணில் உப்புசப்பற்றப் பதில் ஒன்றை விடுதலைப் புலிகள் வொஷிங்டனுக்கு அழைக்கப் படாதமையை ஒட்டி அனுப்பினார்.

(வளரும்...)

காலைக்கதிர் Kalaikkathir

# அரசியல் அநாதைகளாகும் திருகோணமலை முஸ்லிம்!

## கிண்ணியா நகர சபை உறுப்பினர் எம்.எம்.மஹ்தி ஆதங்கம்

திருகோணமலை, ஒக். 03

திருகோணமலை மாவட்டத்தில் சுதந்திரத்திரத்துக்கு பின்னரான காலங்களில் இருந்து இன்று வரை ஆளும் கட்சியிலும் எதிர்க்கட்சியிலும் நாடாளுமன்ற உறுப்பினர்களை தொடர்ச்சியாக முஸ்லிம்கள் தெரிவு செய்து வருகின்றனர்.

அவ்வாறு தெரிவு செய்கின்ற போதிலும் அண்மைய தசாப்த காலங்களில் முஸ்லிம்கள் அரசியல் ரீதியான தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியாத அநாதைகளாகவே இருந்து கொண்டிருக்கின்றார்கள்.

– இவ்வாறு தனது ஆதங்கத்தை வெளியிட்டுள்ளார் கிண்ணியா நகர சபை உறுப்பினர் எம்.எம்.மஹ்தி.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

முஸ்லீம்களின் பெரும்பான்மை வாக்குகளால் தெரிவு செய்யப்படுகின்ற இந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமக்கு வாக்களிக்கின்ற மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றுவதில் தவறு விட்டுக் கொண்டே இருக்கின்றார்கள்.

இந்தச் சமூகத்தின் சுய கௌரவம், தனித்துவம் என்பவற்றைப் பாதுகாக்க வேண்டிய இவர்கள் இனத்தின் பெயரால் தமக்கான இயக்கத்தையும் வைத்துக் கொண்டு நயவஞ்சகர்களாகவும், ஏமாற்றுபவர்களாகவும் இருந்து கொண்டிருக்கின்றார்கள்.

முஸ்லிம்களின் காவலர்கள் நாங்களே என்று அலப்பறித்துக் கொள்ளும் இவர்கள் தேர்தல் காலங்களில் பணத்தையும் பார்சல்களையும் வழங்குவதன் மூலம் மக்களை ஏமாற்றி வாக்குகளை பெற்று நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்படுகின்றனர்.

இவர்கள் மக்கள் மீதான எந்தப் பொறுப்புணர்ச்சிகளும் இன்றி தமது சுய நலன்களுக்காக பணத்துக்கும், பதவிகளுக்கும், சோரம் போகின்றவர்களாக இருக்கின்றனர்.

அரசியலுக்கான தலைமைத்துவப் பண்புகள், விவேகம், ஆற்றல், துணிவு, வெளிப்படைத் தன்மை எனும் பண்புகள் இல்லாத இவர்களை நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்கின்றமை இம் மக்கள் செய்யும் மாபெரும் தவறாகும்.

சில பேரினவாதிகள் தமக்கான அரசியல் நிகழ்ச்சி நிரலில் திட்டமிட்டு கட்டமைத்த போலியான குற்றச்சாட்டுகளை முஸ்லிம்கள் மீது திணித்து குற்றவாளிக் கூண்டில் ஏற்றுவதற்காக அரங்கேற்றிய அருவருக்கத்தக்க செயற்பாடுகளால் முஸ்லீம்களும் முஸ்லிம்களின் உடைமைகளும் உயிர்களும் அநியாயமாகவே அழிக்கப்பட்டன.

வைத்தியர் சாபி மீதான போலிக் குற்றச் சாட்டுகள், நூற்றுக்கணக்கான உயிர்களை பலி எடுத்த ஈஸ்டர் தாக்குதல், அம்பாறை, திகன தாக்குதல்கள் முஸ்லிம்களின் ஆடைகள், தனியார் சட்டங்கள், பள்ளிகள், வியாபார நிலையங்கள் மீது பல்வேறு துன்பியல் சம்பவங்களை அநியாயமாக அரங்கேற்றினார்கள்.

கொரோனா என்ற பேரனர்த்தத்தின் பெயரால் 20 நாள் பச்சிளம் குழந்தை உட்பட பல நூறு முஸ்லீம் ஜனாஸாக்களை எரித்தார்கள். முஸ்லிம் சமூகத்தின் தலைமைகள், ஆன்மீகத் தலைவர்கள், உலமாக்கள், அறிஞர்கள் என பலரை பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையிலடைத்தார்கள்.

இவ்வாறான துன்பியல் சம்பவங்கள் பலவற்றை இந்த அப்பாவி முஸ்லீம்கள் மீது அநியாயமாக அரங்கேற்றினார்கள்.

அவ்வாறு அரங்கேற்றப்பட்ட கொடிய செயல்கள் அனைத்துக்கும் சூத்திர தாரிகளாக இருந்த அக்கருமக்காரர்களின் கூடாரத்திற்குள் மறைந்து கொண்ட இந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுகபோகங்களை அனுபவித்தமை மாத்திரமன்றி இந் நாட்டுக்கும் ஜனநாயகத்துக்கும் சவால் விடுக்கின்ற 20 ஆவது சட்டத் திருத்தத்துக்கும் கை தூக்கி ஆதரவு வழங்கினார்கள்.

கொரோனாவின் தாண்டவத்தால் ஊரே முடக்கப்பட்ட போது மக்களோ தொழில்களின்றி உணவின்றி, பால்மா இன்றி, பசி பட்டினியால் வாடிக் கொண்டிருந்த போது அவர்களின் துயர் துடைக்க முன்வரவில்லை.

புல்மோட்டை, குச்சவெளி, தோப்பூர், கிண்ணியா உட்பட பல பிரதேசங்களில் முஸ்லிம்களின் புராணக் காணிகள் படிப்படியாக பறிபோய்க்கொண்டிருக்கின்றன. அவற்றின் தகவல்களை திரட்டுவதற்கோ, ஆவணப்படுத்துவதற்கோ அல்லது அவற்றை மீட்டு, பாதுகாக்கவோ, கபலீகரத்தை தடுத்து நிறுத்துவதற்கோ எந்த முயற்சியும் எடுப்பதற்கு அவர்களால் முடியாதுள்ளது.

கல்வியில் ஆயிரம் பிரச்சினைகள், ஆன்மீகத்தில் வீழ்ச்சி, போதையின் ஆக்கிரமிப்பு என பல்வேறு அச்சுறுத்தல்கள் எமது சமூகத்தை துவம்சம் செய்து கொண்டிருக்கின்றன.

அவற்றை ஏன்? எதற்காக? என்றோ யார் காரணம் என்றோ ஆராய்ந்து அவற்றிற்கான தீர்வுகளைத் தேட அவர்களுக்கு நேரமில்லை.

இன்னும் 10 அல்லது 20 வருடங்களில் எமது பிரதேசம் கல்வியில், கலாசாரத்தில், பொருளாதாரத்தில் அபிவிருத்திகளில் எப்படி இருக்க வேண்டும் என்று ஆய்வுகள் செய்து குறுங்கால நீண்ட கால திட்டங்களைத் தயாரித்து அவற்றின் ஊடான தீர்வுத் திட்டத்தை முன்மொழிந்து அந்த இலக்கை நோக்கி பயணிப்பதற்கும் தயாரில்லை.

எமது புத்தி ஜீவிகளை, துறைசார்ந்தவர்களை ஆலோசகர்களாக ஏற்று அவர்களின் ஆலோசனைகள் வழிகாட்டல்களைப் பெற்று அவற்றையேனும் செயற்படுத்த இந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாரில்லை.

வீதிகளை அமைப்பதும், கட்டடங்களை கட்டுவதும், பாலங்களை அமைப்பதும், அவற்றின் மூலம் கொமிஸன் பெறுவதும் தம்மை சாதனையாளர்கள் போல் விளம்பரப் படுத்திக் கொள்வதும் தான் அரசியல் எனவும் அதுவேஎமதுபணிஎன்றும்நினைத்துக்கொண்டிருக்கும் இவர்களிடத்தில் எப்படி எமது அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியும்?

இவ்வாறான அடி மட்ட அரசியற் செயற்பாடுகளை தமது ஆயுதமாக கொண்டிருக்கும் இவ்வாறான அரசியல் வாதிகளுக்கு அதுவே பெரும் சாதனை என அலப்பரிக்கும் ஆதரவாளர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

இனி மேலாவது நாம் சிந்திக்காது இவ்வாறே எமது அரசியற் பயணம் தொடருமாக இருந்தால் எப்போது நாம் ஏனைய பிரதேசங்களோடு சமாந்தரமாக பயணிப்பது? என்ற வினாவை எமக்குள் எழுப்ப வேண்டி இருக்கின்றது.

அண்மைய நாள்களில் நாடாளுமன்ற 'தேசிய சபை' என்ற கட்டமைப்பை உண்டாக்க வேண்டும் என ஆளும் அரசாங்கம் முயற்கிக்கின்றது. அச்சபையின் உருவாக்கத்தில் வாதப் பிரதிவாதங்கள் இல்லாமல் இல்லை.

இருந்தாலும் அவ்வுயரிய சபையிலே தாமும் அங்கம் வகிப்பதாக இருந்தால் எமது மக்கள் முகங் கொடுக்கின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வை பெற்றுத் தர வேண்டும் எனவும். விசாரணைகள் இன்றி பல வருடங்களாக சிறையில் வாடும் அரசியல் கைதிகளை விடுதலை செய்யவேண்டும். அநியாயமாக கபலீகரம் செய்யப் படுகின்ற எமது பூர்வீகக் காணிகளை விடுவிக்க வேண்டும். என தமிழ் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிபந்தனைகளை முன்வைக்கின்றனர்.

மேலே சொல்லப்பட்ட அதே பிரச்சினைகளுக்கு எமது சமூகமும் முகங்கொடுத்துக் கொண்டிருக்கின்றது. அவற்றின் தகவல்களை இவர்கள் திரட்டினார்களா? வழக்குகளை தொடர்ந்தார்களா? கவனவீர்ப்பு போராட்டங்களையேனும் நடத்தினார்களா? ஜெனீவாவுக்கு கொண்டு செல்ல முயற்சித்தார்களா? என சிந்தித்தால் எந்த முயற்சியும் அவர்களிடத்தில் இல்லை. அவ்வாறாயின் இந்தச் சமூகம் இந்நாட்டில் எப்படி நிலைத்து நிற்க முடியும்.

இம்மாவட்டத்தில் வாழும் முஸ்லிம் மக்கள் தமது அரசியல் தலைமைகளைத் தொடர்ச்சியாக தெரிவு செய்த போதிலும் தமது அரசியல் அபிலாகைளை நிறைவேற்றிக் கொள்ள முடியாமல் இன்னும் அரசியல் அநாதைகளாகவே இருக்கின்றார்கள் .

சமூக நிறுவனங்களும் சில உள்ளூர் தலைவர்களும் தமது சக்திக்கு உட்பட்ட வகையில் முடியுமான சில முயற்சிகளை செய்து நீதிமன்றங்கள் பொலீஸ் நிலையம் என அலைவதோடுஅவை தொடர்பாகப்பல ஆய்வுகளையும் நடத்திக் கொண்டு புதிய திட்டங்களை முன்மொழிந்து ஆவணங்களாக வைத்துக் கொண்டு இருகின்றார்கள். காலங்களும் ஓடிக் கொண்டுதான் இருக்கின்றன.

அவ்வாறாயின் தூரநோக்கு இல்லாது நமது அரசியல் அபிலாகைளை நிறைவேற்ற முடியாத சுய நல அரசியலை செய்து கொண்டிருக்கும் இவ்வாறான அரசியல் தலைமைகளைத் தான் தொடர்ந்தும் தெரிவு செய்யப் போகின்றோமா? என்ற கேள்வியை எழுப்புகின்றது.

எனவே எதிர்வரும் காலங்களிலேனும் அரசியல் களத்தில் இருந்து கொண்டு காலத்தை வீணாக கடத்தும் இவ்வாறானவர்களைத் தவிர்த்து பொருத்தமான தகுதியான புதிய தலைவர்களை அடையாளம் கண்டு அவர்களை தலைவர்களாக்க நாமே ஒன்றிணைய வேண்டும் என சமூகம் சார்பாக நான் முன் மொழிகின்றேன். – என்றார்.

## ஓட்டோக் கட்டணங்களை குறைப்பதற்கான வாய்ப்பு?

எரிபொருள்களின் விநியோகத்தை அதிகரிக்கும் பட்சத்தில் ஓட்டோ கட்டணங்களை குறைக்க முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அகில இலங்கை ஓட்டோச் சாரதிகள் மற்றும் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் சுதில் ஜயருக் இதனைத் தெரிவித்துள்ளார்.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு ஓட்டோக்களுக்கு மேலும் பத்து லீற்றர் அல்லது அதற்கு மேலதிகமாக எரிபொருளை அனுமதித்தால் ஓட்டோக் கட்டணங்கள் குறைக்க வசதியாக இருக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வாரம் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இது தொடர்பில் ஆராயப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த கலந்துரையாடலின் போது எரிபொருள் ஒதுக்கீட்டை மேலும் 10 லீற்றர் அதிகரிப்பதற்கு ஜனாதிபதியின் ஆலோசகர் தீர்மானித்தார் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## போரில் உயிரிழந்த மாணவர் நினைவாக சிறுவர் தினத்தில் இரத்ததான முகாம்!



சிறுவர் தினத்தை முன்னிட்டு போரின் போது உயிரிழந்த மாணவர்கள் நினைவாக கிளிநொச்சி மகாவித்தியாலய 2015 உயர்தர மாணவ அணியினரின் 'எழுகை' அமையத்தின் ஒழுங்குபடுத்தலில் குருதிக்கொடை முகாம் நேற்'று (சனிக்கிழமை) இடம்பெற்றது.

கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தில் இந்த இரத்ததான முகாம் 9 ஆவது வருடமாக நேற்று இடம்பெற்றது. இந்த நிகழ்வில் சாதனையாளர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

சேவையாளர் விருது ஈழத்து இலக்கிய மூத்த படைப்பாளி யோகேந்திர நாதனுக்கும் முயற்சியாளர் விருது குரு கணினி மையத்தின் உரிமையாளர் குருபரனுக்கும் கற்பித்த ஆசிரியர் விருது திருமதி தெய்வேந்திரமூர்த்திக்கும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் வேழமாலிகிதன் வலிகாமம் வடக்கு வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் யாதவன், கிளிநொச்சி வைத்தியசாலையின் இரத்த வங்கி பொறுப்பதிகாரி வைத்தியர் அனுஷ்கா, பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், வைத்தியசாலையின் பணியாளர்கள், மாணவர்கள் குருதிக் கொடையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# நுட்பியல் அவத்தை

## தரவுத்தள மேலாண்மை

ஜனனீ தேவானந்த்
(முதுநிலை விரிவுரையாளர் - தகவல் தொழில்நுட்பம்),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்




நுட்பியல் அவத்தைத் தொடரில் கடந்த வாரம் தரவுத் தளங்கள் எவ்வாறு எதிர்கால நுட்பியல் அவத்தையாக உருவெடுக்கின்றது என்பதைப்பார்த்தோம். அது எதிர்காலத்தில் மனிதகுலத்தின் நாளாந்த வாழ்வியலாக பரிணமிக்கும், எங்கள் நாளாந்த நுட்பியல் அவத்தையின் பயன்பாட்டுடன் பின்னிப்பிணைந்து புதிய வாழ்வியலுக்கு வழிவகுக்கும் என்பதையும் பார்த்தோம். தரவுத் தளம் பற்றிய மேலும் சில விடயங்களை இங்கு பார்க்கலாம்.

### 1. அதிகரித்த பாதுகாப்புடனான தரவுத்தள முகாமைத்துவ முறைமைகள்.

ஊலகளவில் மிகப்பிரபலமான சமூக ஊடகத்தகவல்கள் திருடப்பட்டதன் விளைவாக அதிகரித்த தரவுத் தள முறைமைகள் இன்று முக்கியம் பெறுகின்றன. ஏப்போதும் தரவுத்தள நிர்வாகிகளுக்கு பாதுகாப்பு என்பது முக்கியமானதாகிறது. ஆனால் சமீபத்திய சமூக ஊடக பாதுகாப்பு மீறல்கள் தரவுத்தளங்களின் அதீத பாதுகாப்பு பற்றி சிந்திக்க வைத்துள்ளது. இதன் விளைவாக, அதிகரித்த தரவுத்தள பாதுகாப்பு ஒரு பிரபலமான பிரச்சினையாக மாறியுள்ளது. இவை பற்றி இன்று அதிகளவில் சிந்திக்கப்படுகின்றது. கடந்த ஆண்டில் பல உயர்தர தரவு தள மீறல்கள் நடந்துள்ளன. எடுத்துக்காட்டாக, ஜூன் 2021 இல் LinkedIn மீறப்பட்டது, இதன் விளைவாக 700 மில்லியன் பயனர்கள் பதிக்கப்பட்டார்கள். அதே போல செப்டம்பரில், சில்லறை விற்பனையாளர் நெய்மன் மார்கஸ் பாதுகாப்பு மீறப்பட்டது, இதனால் 4.8 மில்லியன் வாடிக்கையாளர்கள் பாதிக்கப்பட்டனர். 2021 அக்டோபரில், 1.5 பில்லியன் பேஸ்புக் பயனர்களின் தகவல்கள் இதே போன்று பாதிப்புக்குள்ளனார்கள்.

### 2. இன் - மெமரி தரவுத்தளங்கள் (In-Memory Database)


பொதுவாக தரவுத்தளங்கள் சேமிப்புக்கலங்களில் சேமித்து வைக்கப்படுகின்றன. துற்போது குறிப்பிட்ட சில பயன்பாடுகளிற்காக இவை தலைமை நினைவகத்தில் சேமித்து வைக்கப்படுகின்றன. இதனை இன் – மெமரி தரவுத்தளங்கள் என்பர். இன் – மெமரி தரவுத்தளங்கள் தற்போது பிரபலமடைந்து வருகின்றன, ஏனெனில் அவை பாரம்பரிய அமைப்புகளை விட வேகமாக பதிலளிக்கின்றன. இன் – மெமரி தரவுத்தளமானது கணினியின் முக்கிய நினைவகத்தில் தரவை சேமிக்கிறது. இதனால் தரவைக் கையாளும் நேரம் குறைக்கப்படுகிறது. தரவுகளை மொழிபெயர்ப்பு செய்யத்தேவையில்லை என்பதால் பதிலளிக்கும் நேரம் குறைக்கப்படுகிறது. பயன்படுத்தப்படும் தரவு எப்படி வந்ததோ அதே வடிவத்திலும், அதனுடன் செயல்படும் போது எவ்வாறு காணப்பட்டதோ இதே வடிவத்திலும் இருக்கும். இந்த தரவுத்தளங்கள் பொதுவாக விரைவான பதிலளிக்கும் நேரத்தைச் சார்ந்து நிகழ்நேர தரவு முகாமைத்துவத்தை வழங்கும். இவ்வாறான இன் – மெமரி தரவுத்தளங்களிலிருந்து செயல்படும் மற்றும் பயனடையும் தொழில்களில் வங்கி, பயணம், விளையாட்டு (கேமிங்) மற்றும் தொலைத்தொடர்பு ஆகியவை அடங்கும்.

### 3. வரைபட தரவுத்தளங்கள்

வரைபட தரவுத்தளங்கள் விரைவான மற்றும் எளிதான வழியில் தரவுகளை நிறுவுவதற்கும் ஆராய்ச்சி செய்வதற்கும் ஒரு சிறந்த வழியை வழங்குகிறது. அவை தரவுகளிற்கு இடையிலான உறவுகளை உருவாக்க பயன்படுத்தப்படுகின்றன. வரைபட தரவுத்தளங்கள் தரவு பெறும் அதே முக்கியத்துவத்துடன் தரவு நிறுவனங்களுக்கு இடையிலான உறவை வலுப்படுத்த வடிவமைக்கப்பட்டுள்ளன. தற்போது, வரைபட தரவுத்தளங்கள் நெட்வொர்க் மற்றும் ஐவு துறைகளுடன் ஒருங்கிணைந்து பயன்படுத்தப்படுகின்றன. சமூக ஊடகங்களை அணுகுவதற்கும் வணிக நுண்ணறிவை வழங்குவதற்கும், முரண்பாடுகளைக் கண்டறிந்து பாதுகாப்பை மேம்படுத்துவதற்கும் அவை பயன்படுத்தப்பட்டுள்ளன.

### 4. திறந்த மூல தரவுத்தள முகாமைத்துவ முறைமைகள்

பத்து ஆண்டுகளுக்கு முன்பு, 'ஓப்பன் சோர்ஸ்' டேட்டாபேஸ் மேனேஜ்மென்ட் சிஸ்டம் இப்போது இருப்பது போல் பொதுவாகப் பயன்படுத்தப்படவில்லை. அவை இப்போது சந்தையில் 7% மக்களால் பயன்படுத்தப்படுகின்றன. திறந்த தொழில்நுட்பங்கள் வசதிகள்




பொதுவாக வளர்ச்சியடைந்து விரைவாக வளர்ந்து வருகின்றது. திறந்த மூல தொழில்நுட்பங்கள் பொதுவாக தத்தெடுப்பு தளங்களுடனான இங்குநிலைத் தடைகளை குறைக்கும் படியாக வடிவமைக்கப்பட்டுள்ளன. பயனுள்ள வணிக – முக்கியமான மென்பொருளை உருவாக்க மற்றும் விநியோகிக்க இது பயன்படுத்தப்படுகின்றது.

### 5. சேவையாக தரவுத்தளங்கள்

பொதுவாக, கடந்த காலத்தில் தரவுத்தளங்கள் மைக்ரோ சேவையுடன் வேலை செய்ய வடிவமைக்கப்படவில்லை. தற்போது இவை ஒரு மைக்ரோ சேவையாகப் பயன்படுத்தப்படுகின்றன. அதாவது, நுண்சேவைக்காகப் பயன்படுத்தப்படுகிறது. நுண் சேவைப் பயன்பாட்டில், தரவு பகிரப்படுவதில்லை, அங்கு தரவு பரவலாக்கப்படுகிறது. ஒவ்வொரு நுண்சேவையும் தன்னாட்சியாகச் செயற்படுகின்றன, அதன் செயல்பாட்டிற்கு பொருத்தமான தனிப்பட்ட தரவு சேமிப்பகத்தைக் கொண்டுள்ளன.

### 6. தரவுத்தள மேலாண்மை போக்குகள் மற்றும் பரிணாமம்

சமீப காலம் வரை, தரவுத்தளங்கள் போலியற்ற நம்பகத்தன்மையை வழங்கும் நிலையான, நம்பகமான கட்டமைப்புகளாகக் கருதப்படுகின்றன. அதே நேரத்தில் மிகவும் புத்திசாலித்தனமாகவும் கருதப்பட்டன. ஆனால் தற்போது, வணிகநிறுவனங்கள் தங்கள் தரவுத் தளங்களை கிளவுட் தரவுத்தளங்களுக்கு மாற்றுகின்றன. இது விரைவான ஒருங்கிணைப்பு மற்றும் உள்ளமைவை வழங்குகிறது. இதில் கூடுதலாக, மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பு நெறிமுறைகள் காணப்படுகின்றன. தரவுத்தள முகாமைத்துவ முறைமைகளில் அதிகரித்து வரும் கோரிக்கைகள் – மற்றும் அதிகரித்து வரும் தீர்வுகள் – புதிய தரவுத்தள மேலாண்மை அமைப்பைத் தேர்ந்தெடுப்பதற்கான ஆராய்ச்சிக்கான முக்கிய படியாக அமைகிறது. இதனால் தரவுத்தள மேலாண்மை போக்குகள் புதிய பரிமாணத்தை எட்டியுள்ளன.

காலைக்கதிர் Kalaikkathir

## யாழ் கோட்டையில் இசகுபிசகுகளை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

யாழ்ப்பாண கோட்டை பகுதியை நேற்றைய தினம் நேரில் பார்வையிட்ட மாநகர முதல்வர், அங்கு இடம்பெற்று வரும் அநாகரிக செயற்பாடுகளை கேட்டறிந்துகொண்டமையுடன் நேரடியாக அதனை அவதானித்தார்.

இதன் பின்னராக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே யாழ் மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

கோட்டை பகுதிகளில் அநாகரிக செயற்பாடுகளில் ஈடுபட்டு வருபவர்கள் இனங்காணப்பட்டால், அவர்களை கடுமையாக எச்சரித்து பொலிஸார் ஊடாக பெற்றோரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

யாழ்ப்பாண கோட்டை பகுதி சமூகச் சீரழிவு நடவடிக்கைகள் மற்றும் போதை பொருள் பாவனை மையமாக மாறி வருகிறது. கோட்டைப் பகுதியை சுற்றியுள்ள பற்றைக் காடுகளை அகற்றுமாறு நீதிபதிகள் யாழ் மாநகர சபையிடம் வேண்டுகோள் விடுத்திருந்தனர். ஆகவே கோட்டைப் பகுதியைச் சுற்றியுள்ள பற்றைக் காடுகளை உடனடியாக அகற்றுவதற்கு நாங்கள் நடவடிக்கை எடுக்க உள்ளோம்.

யாழ்ப்பாணக் கோட்டைப் பகுதி தொல்லியல் திணைக்களத்தின் ஆளுகைக்குள் இருப்பதால் தொல்லியல் திணைக்களத்தினருடன் பேசி இதற்கான நடவடிக்கை எடுக்க உள்ளோம். அவர்களும் இதற்கு சம்மதத்தைத் தெரிவித்துள்ளனர். - என்றார்.

## வாள்வெட்டு வன்முறைக் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாவடியைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

மானிப்பாயில் அண்மையில் இரு வேறு வீடுகளுக்குள் புகுந்து பெறுமதியான பொருடள்களை அடித்துச் சேதப்படுத்தியமை, கடந்த வருடம் அரியாலை மற்றும் பளையில் வீடுகளுக்குள் புகுந்து அட்டூழியத்தில் ஈடுபட்டமை தொடர்பில் இந்த இளைஞன் தேடப்பட்டு வந்துள்ளார்.

அவருக்கு மோட்டார் சைக்கிள் வழங்கியமை தொடர்பில் ஒருவரும், வன்முறையில் ஈடுபட்ட இருவரும் என மூவர் கடந்த மாதம் கைது செய்யப்பட்டனர். அவர்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் முதன்மை சந்தேக நபர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

சந்தேக நபரிடமிருந்து 3 வாள்கள், மோட்டார் சைக்கிள் என்பன சான்றுப் பொருள்களாக கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடைய மேலும் ஐவர் தேடப்படுகின்றனர் என்றும் அவர்கள் கூறினர்.

இந்தக் கைது நவடிக்கையை முன்னெடுத்த யாழ்ப்பாணம் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் தலைமை பொலிஸ் இன்ஸ்பெக்டர் நிகால் பிரான்ஸிஸ் தலைமையிலான மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## யாழ் பல்கலைக்கழக .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று மாலை 4 மணியளவில் கொழும்பில் உள்ள சீனத் தூதரகத்தில் இலங்கைக்கான சீனத் தூதுவர் கியூ சென்ஹோங்கிடம் இருந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் எஸ். சிறிசற்குணராஜா இந்த உதவித்தொகையைப் பெற்றுக்கொண்டார்.

இந்நிகழ்வில் சீனத் தூதுவரின் முதன்மைச் செயலாளர் லி கிங்ருய், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் நலன்புரி சேவைகள் பணிப்பாளர் எஸ்.ராஜுமேஷ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

2016 ஆம் ஆண்டு முதல், சீன தூதுவரின் உதவித்தொகை திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதி உதவி நாட்டிலுள்ள பல் வேறு பல்கலைக்கழகங்களிடையே விநியோகிக்கப்படுகிற நிலையில் இந்த ஆண்டு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கும் இலங்கையின் கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கும் இடையில் முழு நிதி யும் பகிர்ந்து கொள்ளப்படுகிறது.

இந்த நிதியுதவியானது பல்கலைக்கழக மாணவர்களுக்கான மாதாந்த உதவித்தொகை வழங்குதல் உள்ளிட்ட பல நலத்திட்டங்களுக்கு பயன்படுத்தப்படும் என யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் நலன்புரி கிளை தெரிவித்துள்ளது.

## பசுபதிப்பிள்ளை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னர், உருத்திரபுரீஸ்வரர் ஆலயத்தின் தலைவராக இருந்தமையுடன், சமயப் பணிகளையும் முன்னெடுத்தார்.

உருத்திரபுரீஸ்வரர் ஆலய வளாகத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிக்குக் கடும் எதிர்ப்பு தெரிவித்தமையுடன், பௌத்த ஆதிக்கத்திற்கு எதிராக மக்கள் போராட்டங்களையும் முன்னெடுத்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## கோட்டா கால .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோட்டாபய ராஜபக்ஷ அரசில் செய்த அதே சண்டித்தனங்களையே கமல் குணர்தன இப்போதும் செய்து வருகிறார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பியான ஹர் டி சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்பட உள்ள 51/1 பிரேரணைக்கு எதிராக வாக்களிக்க இலங்கை அரசாங்கம் தீர்மானித்திருந்தாலும், இதில் இலங்கைக்குத் தோல்வியே கிட்டும் எனவும் அவர் அங்கு தெரிவித்தார்.

## சு.கவினருக்கு ஒரு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இல்லாது இருக்க முடியாதென அவர் தெரிவித்துள்ளார்.

1994ஆம் ஆண்டிலிருந்து 25 வருடங்களுக்கு மேலாக நாம் நாட்டை ஆட்சி செய்துள்ளோம். சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்களே நாட்டின் ஜனாதிபதிகளாக இருந்திருக்கிறார்கள். இதனால் சுதந்திரக் கட்சியில் உள்ள சிலருக்கு ஆட்சியதிகாரத்தில் தொடர்ந்து இருந்ததால், பதவிகள் இல்லாது இருக்க முடியாது. இதுவொரு நோய் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை அரசாங்கத்தில் இணைந்து அண்மையில் அமைச்சு பதவிகளை பெற்றுக்கொண்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் 8 நாடாளுமன்ற உறுப்பினர்கள், தொகுதி அமைப்பாளர், மாவட்ட தலைவர் மற்றும் கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர் பதவிகளில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் நேற்றையதினம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் துமிந்த திஸாநாயக்க அரசியல் குழுவிலிருந்து நீக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## 3 வயதுக் குழந்தை மீது ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனக் கூறப்பட்டது. சந்தேகநபர் நேற்று முன்தினம் பல சந்தர்ப்பங்களில் குழந்தையை துஷ்பிரயோகம் செய்துள்ளார்.

குழந்தையின் தாய் குழந்தையை அருகில் உள்ள வீட்டில் விட்டு விட்டு மருத்துவமனைக்குச் சென்றுள்ளார். இதன் போதே சந்தேக நபர் இந்தக் குற்றச் செயலைச் செய்துள்ளார்.

சந்தேகநபர் சியாம்பலாண்டுவ நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர் எதிர்வரும் 14ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

பாலியல் துஷ்பிரயோகம் காரணமாக காயமடைந்த குழந்தை தற்போது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளது. தொம்பகஹவெல பொலிஸ் நிலைய அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இணையனுசரணை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பாட்டில் கடந்த செப்டெம்பர் மாதம் 22 ஆம் திகதி தூதுவருக்கும் புலம்பெயர் தமிழர் கூட்டணியின் பிரதிநிதிகளுக்கும் இடையில் நிகழ்நிலையில் சந்திப்பொன்று இடம்பெற்றது.

இதன்போது இலங்கையிலுள்ள அமெரிக்க செயற்திட்டம் மற்றும் சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க உதவித்திட்டம் என்பன தொடர்பில் புலம்பெயர் தமிழர் கூட்டணியின் பிரதிநிதிகளால் தூதுவர் ஜூலி சங்கிடம் கேள்விகள் எழுப்பப்பட்டன.

குறிப்பாக சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க உதவித்திட்டத்தினால் வழங்கப்படும் உதவிகள் பின்தங்கிய சமூகப்பிரிவினர் மத்தியில் எவ்வாறு நியாயமான முறையில் பகிர்ந்தளிக்கப்படுமென சில இலங்கை - அமெரிக்க சமூகத்தலைவர்கள் கேள்வி எழுப்பினர்.

அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கிய முறைமையின் அடிப்படையிலேயே அவ்வுதவிகள் பகிரப்படுமென அமெரிக்கத்தூதுவர் ஜூலி சங் உறுதியளித்தமையுடன் வெளிநாட்டு உதவிகள் எவ்வாறு விநியோகிக்கப்படும் என்றும், அவை எவ்வாறு கண்காணிக்கப்படும் என்றும் விளக்கமளித்தார்.

அத்தோடு சுகாதாரத்துறையை விருத்தி செய்தல், தொழில்சார் ஒத்துழைப்பை மேம்படுத்தல், சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க உதவித்திட்டத்திடம் இருந்து சிறிய வணிகங்களுக்கு அவசியமான நிதியைப்பெறல் ஆகிய விடயங்கள் சார்ந்தும் கேள்விகள் எழுப்பப்பட்டன.

அதேவேளை அமெரிக்காவினால் வழங்கப்படும் இவ்வுதவிகள் மனித உரிமைகள்சார் கடப்பாடுகளை நிறைவேற்றுவதாக இலங்கையை இணங்கச்செய்வதுடன் தொடர்புபட்டிருக்கின்றதா என்று அமெரிக்கத் தமிழர் செயற்பாட்டுக்குழுவின் பிரதிநிதி அமெரிக்கத்தூதுவர் ஜூலி சங்கிடம் வினவினார். அதற்குப் பதிலளித்த தூதுவர் ஜூலி சங், அமெரிக்கா இணையனுசரணை நாடுகளுடன் வலுவாக நிற்பதாகவும், தான் தனிப்பட்ட ரீதியில் காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்களைச் சந்தித்ததாகவும், எந்தவொரு ஜனநாயக நாட்டிலும் மக்களின் கோரிக்கைகளுக்கு செவிசாய்ப்பது இன்றியமையாததாகும் என்றும் தெரிவித்தார்.

மேலும் 2009 ஆம் ஆண்டின் பின்னரான நல்லிணக்கப் பொறிமுறையைப் பொறுத்தமட்டில், கரிசனைகளை வெளிப்படுத்தக் கூடிய முக்கிய கட்டமைப்பாக தாம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையைக் கருதுகிறார் எனவும், காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் போன்ற கட்டமைப்புக்களை வலுப்படுத்துவதற்கு அவசியமான ஒத்துழைப்புக்களை இலங்கைக்கு வழங்கத்தயாராக இருப்பதாகவும் அமெரிக்கத்தூதுவர் ஜூலி சங் உறுதியளித்தமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கைப் படை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது கூட்டத்தொடர் நடைபெற்றுவரும் நிலையில், மனித உரிமைகள் மற்றும் பொறுப்புக்கூறல் விவகாரம் உள்ளடங்கலாக இலங்கையின் தற்போதைய நிலைவரத்தை தமது அரசாங்கம் மிக உன்னிப்பாக மதிப்பாய்வு செய்துவருவதாகவும், அதன்படி 'தடைவிதிப்பு' உள்ளடங்கலாகத் தம்வசமுள்ள இராஜதந்திர உத்திகளை எவ்வாறு பிரயோகிக்கமுடியும் என்பது குறித்துத் தீவிரமாக ஆராய்ந்து வருவதாகவும் அமைச்சர் ஜெஸி நோர்மன் தெரிவித்துள்ளார்.

முன்னாள் இராணுவத்தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா மற்றும் ஏனைய இராணுவத்தினருக்கு எதிராகத் தடைகளை விதித்தல் தொடர்பான அண்மைய மதிப்பீடு குறித்து தொழிற்கட்சி உறுப்பினர் பெத் வின்டரினால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் ஜெஸி நோர்மன் மேற்குறிப்பிட்டவாறு தெரிவித்துள்ளார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம் -
076 443 8622
kalaikkathiradvt@gmail.com



காலைக்கதிர்
Kalaikkathir

# கோணேஸ்வரர் ஆலய வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும் இந்திய அரசாங்கம் உதவக் காத்துக்கொண்டிருக்கின்றது!

## கோபால் பாக்லே உத்தரவாதம்





எதிர்காலத்தில் திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலயத்தினுடைய வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் இந்திய அரசாங்கம் உதவுவதற்கு காத்துக் கொண்டிருக்கின்றது என இந்திய தூதுவர் கோபால் பாக்லே தெரிவித்தார்.

திருகோணமலைதிருக்கோணேஸ்வர ஆலயத்துக்கு நேற்று (ஞாயிற்றுக்கிழமை) விஜயம் செய்து பூசை வழிபாட்டில் கலந்துகொண்டதுடன் ஆலய நிர்வாகப் பணிகளையும் பார்வையிட்டார்.

இதனையடுத்து கோயில் நிர்வாகத்தினரையும் சந்தித்து கலந்துரையாடியதுடன் கோயில் நிர்வாகத்தினர் இந்திய தூதுவரை பொன்னாடை போர்த்துக் கௌரவித்தனர்.

அதனையடுத்து ஊடகங்களுக்கு அவர் இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த திருக்கோணேஸ்வரர் ஆலயத்திற்கு நான் வருகை தந்திருக்கிறேன்.

இன்றைய நாள் ஒரு விசேட நாள். நவராத்திரி காலம் விரதம் அனுஷ்டிக்கப்படுகிற அதே காலத்தில் காந்தி ஜெயந்தி நடைபெறுகின்ற இன்றைய நாளில் இந்த இடத்துக்கு நான் விஜயம் செய்து பூஜை வழிபாடுகளிலும் மிக நேர்த்தியாக நான் கலந்து கொண்டது மாத்திரமில்ல இந்த ஆலயத்தினுடைய தொன்மையான வரலாறு பூர்வீகமான விடயங்கள் அனைத்தையும் அறிஞர்களும்,ஆலய நிர்வாகிகளும் எனக்கு நிறைந்த தெளிவுடன் அறியத் தந்திருக்கின்றார்கள்.

எதிர்காலத்தில் இந்த ஆலயத்தினுடைய வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும் இந்திய அரசாங்கம் உதவுவதற்குக் காத்துக் கொண்டிருக்கிறது என்பதை மிகத் தாழ்மையாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஆலயம் ஒரு புனிதமானது மாத்திரமல்ல நாயன்மார்களால் பாடப்பட்ட ஓர் ஆலயம் என்பதை நான் அறிவேன். அந்த வகையில் இந்த ஆலயத்தினுடைய எதிர்காலம் நன்றாக அமைய வேண்டும்.

இங்கு ஒரு ராஜகோபுரம் அமைக்கப்பட இருக்கின்றதையும் ஆலய நிர்வாகிகள் எனக்கு தெரிவித்தார்கள் அந்த விடயம் தொடர்பாகவும் இந்திய அரசாங்கம் கவனம் செலுத்தும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். எனவும் அவர் தெரிவித்தார்.

இதன் போது இலங்கை தமிழரசுக் கட்சியின் மாவட்ட தலைவர் சண்முகம் குகதாசன்,. இந்திய தூதரக அரசியல் துறை ஆலோசகர் பானூ பிரகாஸ் மற்றும் இந்தியத் தூதுவரின் பாரியார், நிர்வாக உறுப்பினர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# மீண்டும் கிட்டியுள்ள வாய்ப்புக்களை தமிழ்த் தரப்புக்கள் இழக்ககூடாது!

## அமைச்சர் டக்ளஸ் ஆலோசனை

பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள தேசிய சபையில் தமிழ்த் தரப்புக்களும் பங்கேற்க வேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பகிரங்கமாக அழைப்பு விடுத்துள்ளார்.

1987ஆம் ஆண்டிலிருந்து கிடைக்கும் வாய்ப்புக்களை பயன்படுத்தாது எதிர்மறையான கருத்துக்களை வெளியிட்டு வரும் தமிழ்த் தரப்புக்கள் மீண்டும் கிடைத்துள்ள வாய்ப்பை இழந்து விடக்கூடாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தேசியசபையின் கூட்டம் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றிருந்த நிலையில், நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் தமிழ் மக்கள் விடுதலை முன்னணி ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகள் யாரும் அதில் பங்கேற்றிருக்கவில்லை.

இந்நிலையில் கருத்துவெளியிடும்போதே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உரிமைகளுக்காக போராடிக்கொண்டிருக்கும் தமிழ்த் தரப்புக்களின் போராட்டத்துக்கு உரிய தீர்வு கிடைப்பதற்கான சாத்தியமான எந்தவொரு விடயங்களையும் எதிர்மறையாகவே கருதுகின்றார்கள்.

இதனால், பிரச்சினைகள் தீர்க்கப்படாது நீடித்துக் கொண்டே இருக்கின்றன. இதற்கு அவர்களின் சுயலாப அரசியலே காரணமாகின்றது. பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டால் அவர்களால் அரசியல் களத்தில் நிற்கமுடியாது என்பதற்காகவே எதிர்மறையான கருத்துக்களை வெளியிட்ட வண்ணமுள்ளனர்.

தென்னிலங்கையின் எந்தவொரு தலைவர்களும்,



தனிநாட்டுக்கான கோரிக்கையை அங்கீகரிக்கப்போவதில்லை. ஆகவே, குணாம்சரீதியான அணுகுமுறைகள் ஊடாகப் பிரச்சினைகளுக்கு தீர்வைக் காண்பதற்கு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

அதற்காக, கிடைக்கும் வய்ப்புக்களை முறையாக பயன்படுத்திக்கொள்ள வேண்டியுள்ளது.

1987 ஆம் ஆண்டிலிருந்து வாய்ப்புக்களை எதிர்மறையாக விமர்சித்து தவறவிட்டுக்கொண்டிருக்கும் தமிழ்த் தலைமைகள், தற்போது உருவாக்கப்பட்டுள்ள தேசிய சபையில் பங்கேற்க வேண்டும். இந்த தேசிய சபை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சிந்தனையில் தோற்றம் பெற்றுள்ளது.

ஆகவே, நிச்சயமாக பிரச்சினைகளுக்கான தீர்வை அடைவதற்கான வழிகளை எட்டுவதற்கு வாய்ப்பாக இருப்பதற்கு அதிகளவான சாத்தியப்பாடுகள் உள்ளன. அதனடிப்படையிலேயே தமிழ்த் தலைமைகள் தீர்மானங்களைமேற்கொள்ள வேண்டும். அதனடிப்படையில் தற்போது ஏற்பட்டுள்ள தேசிய சபையில் வாய்ப்பைச் சாதகமாக்கிக் கொள்ள வேண்டும். – என்றார்.

# சுன்னாகம் லயன்ஸ் கழக அனுசரணையில் கலைமதி முன்பள்ளியில் சிறுவர்தின நிகழ்வு!





கந்தரோடை கலைமதி முன்பள்ளியின் சிறுவர்தின நிகழ்வு இன்று (ஞாயிற்றுக்கிழமை) சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் அனுசரணையில் சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவரும்கந்தரோடை கலைமதி சன சமூக நிலையத் தலைவருமாகிய லயன் க. தினேஷ் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் விருந்தினர்களாக சுன்னாகம் லயன்ஸ் கழகச்செயலாளரும்வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினருமாகிய லயன் சி.ஹரிகரனும், கந்தரோடை நோர்வே ஒன்றி யத்தின் தலைவர் ஸ்ரீபவனும் கலந்து கொண்டு மாணவர்களுக்குரிய பரிசில்களை வழங்கி வைத்தனர்.

சுன்னாகம் லயன்ஸ் கழகத்தில் பலவருடம் சேவையாற்றி அமரத்துவமடைந்த லயன் கைலாசநாதன் அமரத்துவமடைந்த நினைவுதினமாகிய இன்று அவரது ஞாபகார்த்தமாக அவரது பேரன் குமரனால் இந்த நிகழ்வுக்கான அனுசரணை வழங்கப்பட்டது. மாணவர்களுக்கான பரிசில் பொதிகளை கந்தரோடை நோர்வே ஒன்றியத்தின் கிளைத் தலைவர் ஸ்ரீபவன் தனது நிதியில் அன்பளிப்புச் செய்தார்.

ஓவியப் போட்டியில் பங்குபற்றிய மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை சுன்னாகம் லயன்ஸ் கழக உறுப்பினர் லயன் செ.விஜிதரன் அன்பளிப்பாக வழங்கியிருந்தார்.

# சத்திரகிச்சைகள், ஆய்வுகூட செயற்பாடுகள் மருந்துகள் பற்றாக்குறையால் நாட்டில் பாதிப்பு

கொழும்பு, ஒக். 03

மருந்து பற்றாக்குறை தொடர்ந்தும் நாடளாவியரீதியில் ஆய்வுகூடங்கள் வைத்தியசாலைகளின் நடவடிக்கைகளைப் பாதித்துவருகின்றது.

லேடிரிஜ்வே வைத்தியசாலை உட்பட நாட்டின் பிரதான வைத்தியசாலைகள் தொடர்ந்தும் அன்டிபயோட்டிக்ஸ் மற்றும் வலி நிவாரணிகள் பற்றாக்குறையை எதிர்கொள்கின்றன எனத் தெரிவித்துள்ள அரசமருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பேச்சாளர் வாசன் ரட்ணசிங்கம் பஞ்சு போன்றவற்றுக்கும் தட்டுப்பாடு காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

சில மருத்துவமனைகள் சாதாரண சத்திரகிசிச்சைகள் தொடர்பாக மாத்திரம் கவனம் செலுத்துகின்றன எனத் தெரிவித்துள்ள அவர், சில வைத்தியசாலைகள் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான சத்திரகிசிச்சைகளை மேற்கொள்கின்றன எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அவர்கள் முற்றாக சத்திரகிசிச்சைகளை ஒத்திவைக்காத அதேவேளை அவர்கள் அவசர சத்திரகிசிச்சைகளை மேற்கொள்கின்றனர் எனவும் தெரிவித்துள்ளார்.

இலங்கை மருந்துகள் விநியோக பிரிவில் போதியளவு பொருள்கள் இன்மையே பற்றாக்குறைக்குக் காரணம் எனக் குறிப்பிட்டுள்ள வாசன் ரட்ணசிங்கம் பற்றாக்குறைகள் உள்ள போதிலும் கொழும்பு லேடி ரிஜ்வே வைத்தியசாலை தொடர்ந்தும் இயங்குகின்றது எனத் தெரிவித்துள்ளார்.

நாங்கள் சிலவகை மருந்துகளை கேட்டால் அவை மருந்துகள் விநியோக பிரிவில் இல்லாத நிலை காணப்படுகின்றது ஆனால் நன்கொடைகள் காரணமாக அவை கொழும்பு லேடி ரிஜ்வே வைத்தியசாலையில் சில நாள்கள்வரை கிடைக்கின்றன எனவும் தெரிவித்துள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.10.2022இல் வெளியிடப்பெற்றது.